2024 – செப்டம்பர் மாதம் 10– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 1054 / 2016*

*2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, கண்ணன் |
| தகப்பனார் பெயர் | : | தங்கசாமி |
| ஊர் | : | பூவாலூர் |
| வட்டம் | : | லால்குடி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 45 |

<u>தேதி: 10.09.2024.</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக :–</u>**

**1).** 15.08.2016–ம் தேதியிட்டு கொள்ளிடம் காவல் நிலைய குற்ற எண் 435/2016–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.1.**

**2).** மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு சான்று ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.2.**

**3).** எனது புகைப்பட நகல் **ம.சா.ஆ.3.**

**4).** நான் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ பில்கள் 40– எண்ணிக்கைகள் கொண்டது. மொத்தம் ரூ.25,804/–தொகைக்கானது **ம.சா.ஆ.4.**

**5).** திருச்சி ரத்தினாகுளோபல் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவக்குறிப்புகள் 5– தாள்கள் கொண்டது அசல் **ம.சா.ஆ.5.**

**6).** எனக்கு எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கை அசல் **ம.சா.ஆ.6.**

ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில்)**

(2 மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**